**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS 144/2019**

**02.06.2026.**

**DW- 1**

**பி.வா.சா.1. ராஜேந்திரன், த/பெ. கண்ணையன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கின் நான் 1ம் பிரதிவாதி என்றால் - சரிதான். வாதி ரவீந்திரன் எனது சகோதரர் என்றால்- சரிதான். 2 மற்றும் 4 ம் பிரதிவாதிகள் எனது சகோதரர்கள் மற்றும் 3 ம் பிரதிவாதி எனது சகோதரி என்றால் - சரிதான். 5 ம் பிரதிவாதி எனது மனைவி என்றால் - சரிதான். எனது தகப்பனார் பெயர் கண்ணையன் என்றால் - சரிதான். எனது தாயார் பெயர் பாப்பாத்தி. எனது தகப்பனார் கண்ணையன் 18.11.2013 ல் காலமாகிவிட்டார் என்றால் - சரிதான். எனது தாயார் பாப்பாத்தி அம்மாள் 01.02.2017 ல் காலமானார் என்றால் - சரிதான். எனது தகப்பனார் உயிருடன் இருந்த வரையிலும் எனது தகப்பனாருக்கு சொந்தமான சொத்துக்களை பொறுத்து எந்தவித பாகப்பிரிவினையும் செய்துக்கொள்ளவில்லை என்றால் - சரிதான். எனது தகப்பனார் உயில் ஆவணமோ அல்லது செட்டில்மெண்ட் ஆவணமோ ஏற்படுத்தி வைக்கவில்லை என்றால் - சரிதான். எனது தாயாரும் அவருக்குரிய பிரிப்படாத சொத்துக்களை பொறுத்து எந்தவித எழுத்து பூர்வமான ஆவணமும் ஏற்படுத்தி வைக்கவில்லை என்றால் - சரிதான். வாதி ரவீந்திரன் ஆரம்பத்தில் இருந்த தமிழக பேருந்தான சோழன் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்தில் 1991 லேயே டிரைவராக பணியில் இருந்தார் என்றால் - சரிதான். பின்பு சோழன் கார்ப்பரேஷன் என்பது தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகமாக மாறியது என்றால் - சரிதான். வாதி, 30.06.2024 ல் தான் பணியிலிருந்து ஓய்வு பெற்றார் என்றால் - சரிதான். எனது சகோதரரான அண்ணாதுரை என்பவரும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் டிரைவராக பணியிலிருக்கிறார் என்றால் - சரிதான். எனது சகோதரர் ராதாகிருஷ்ணன் என்பவர் சுமார் 20 வயதிலேயே சிங்கப்பூர் சென்று தொடர்ந்து அங்கேயே தொழில் செய்துக்கொண்டு அங்கேயே வசித்து வருகிறார் என்றால் - சரிதான். எனது தகப்பனாரும் தாயாரும் காலமான பின்னர் நாங்கள் எங்கள் குடும்பத்தில் எழுத்துபூர்வமான பாகப்பிரிவினை எதுவும் செய்துக்கொள்ளவில்லை என்றால் - சரிதான். எனக்கு அரசு உத்யோகம் அல்லது மாத வருமான வரும் எந்த தொழியும் தனியாக செய்யவில்லை என்றால் - சரியல்ல. ஆரம்பத்தில் சிங்கப்பூரில் இருந்து சம்பாதித்து வந்தேன். சிங்கப்பூர் சென்றதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் - சரியல்ல. எனது தகப்பனாருக்கு ஆரம்பத்தில் அவருக்கு பூர்வீகமாக இருந்த சொத்திலிருந்து 3 ஏக்கர் நிலம் சொந்தமாக இருந்தது என்றால் - இல்லை. எனது தாத்தா முருகையனுக்கு உடன் பிறந்த சகோதரர்களுக்கும் சேர்த்து 3 ஏக்கர் நிலம் இருந்தது என்றால் - சரியல்ல. எனது தாத்தாவின் உடன் பிறந்தவர்கள் பெயர்கள் தெரியாது. கண்ணையன் தகப்பனார் பெயர் முருகையன். எனது தாத்தாவின் உடன் பிறந்தவர்களுக்குள் பிரிப்படாத சொத்தாக 3 ஏக்கர் நிலம் இருந்தது என்றால் - சரிதான். ஆனால் என்ன நிலம் இருந்தது என்று தெரியாது. எனது தகப்பனார் கண்ணையன் எங்கள் ஊரில் 1970 லிருந்து 1988 வரைக்கும் நடுத்தெருவில் டீக்கடை மற்றும் டிபன் கடை வைத்து நடத்தி வந்தாரா என்றால் - நடத்தி வந்தார். எனது தகப்பனாரிடம் 3

ஜோடி காளை மாடுகள் மற்றும் 6 கறவை பசு மாடுகள் மற்றும் 4 கன்றுக்குட்டிகள் இருந்ததா என்றால் - என் அப்பா காலத்தில் இருந்தது. அதிலிருந்து கறவைப்பால் மூலமாக வருமானம் வந்தது என்றால் - சரிதான். வழக்கு சொத்தில் 10.04.1984 ல் எனது தகப்பனார் கண்ணையன் சாளுவர், சிவானந்தம் மற்றும் நாகராஜன் சாளுவரிடமிருந்து பழைய புல எண்.283 ஏ 4 உட்பிரிவிற்கு பின்னர் 2834 ஏபி மற்றும் 283 எ 5, உட்பிரிவிற்கு 283 ஏ 5 ஏ-வை கிரயம் வாங்கினார் என்றால் - சரிதான். 14.12.2001 ல் பிச்சைக்கண்ணுவின் மனைவி சமுத்திரம் என்பவரிடமிருந்து எனது தகப்பனார் கண்ணையன் 659/4 ல் 26 ஏர்ஸ் நிலம் வாங்கியுள்ளார் என்றால் - சரிதான். எனது தகப்பனாருக்கு, பூர்வீக சொந்தமான சொத்து என்பது 283 ஏ 5 பி3 ல் 2 ஏர்ஸ்ம் 283 ஏ 6 பில் 4 ஏர்ஸ்ம் சொந்தமான இருந்தது என்றால் - அதுபற்றி தெரியாது. 4 ஏர்ஸ் நிலம் என் அப்பாவிற்கு எனது தாத்தா பாகமாக கொடுத்தார். 18.08.2007 ல் ஜீவகன் மற்றும் மகேஷ் என்பவரிடமிருந்து எனது தகப்பனார் காரக்கோட்டை கிராமத்தில் 540/5 ல் 12 ஏர்ஸ் வாங்கியுள்ளார் என்றால் – சரிதான். வழக்கு தாக்கல் செய்த பின்னர் இந்நீதிமன்றத்தில் ஒருதலைப்பட்ச உத்தரவான பின்னர், அதனடிப்படையில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது என்றால் - சரிதான். இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியபிறகு என் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்ட என் தரப்பில் வாதம் கேட்கப்படவேண்டும் என்று மனு தாக்கல் செய்தேன் என்றால் - சரிதான். அதன்பின்னர் தான் எதிர் வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால் - சரிதான். இடைப்பட்ட காலத்தில் அந்த பழைய வீட்டை நாங்கள் இடித்து புதிய வீடு கட்டினோம் என்றால் - நாங்கள் இடிக்கவில்லை மழையால் இடிந்துவிட்டது. ஏற்கனவே பழைமையான வீடு இருந்ததை இடித்துவிட்டு தான் தற்போது ஹாலோபிளாக் வைத்து தற்காலிக வீட்டை கட்டியுள்ளேன் என்றால் - சரிதான். பழைய வீட்டை இடித்து புதிய வீடு கட்டிவிட்டதால் அந்த வீட்டை இடித்துவிட்டு அனைவருக்கும் பாகம் தர கேட்டு செயலுறுத்து கட்டளை பரிகாரத்துடன் வழக்கு சீர்திருத்தம் செய்யப்பட்டது என்றால் - சரிதான். இந்த வழக்கில் வாதி வழக்குரையில் காணப்பட்டுள்ள சொத்தில் 1/5 பாகம் கோரி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் - சரிதான். 1/5 பாகம் கோரிய வழக்கில் எனது மனைவி ஜெயலெட்சுமிக்கு பாகம் பிரிக்கப்படாத சொத்தை பொறுத்து 09.04.2019 ல் எடமேலையூர் கிராமத்தில் உள்ள 283 ஏ 4 பி ல் உள்ள 7.5 ஏர்ஸ் நிலத்தையும் மற்றும் 2835 ஏல் உள்ள 1 ஏர்ஸ் நிலத்தையும் அதில் உள்ள பழைமையான வீடான 60 ஆண்டுகளுக்கு முன்பு நாட்டு ஓடு உள்ள வீடு க.எண்.313 இடத்தையும் எனது சகோதரர்களை ஏமாற்றி சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளேன் என்றால் - செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளேன். பத்திரம் எழுதும்போது எனக்கு பூர்வீகமான சொத்து என்று தான் எனது மனைவிக்கு எழுதி வைத்துள்ளேன் என்றால் - சரிதான். அந்த சொத்தில் கண்ணையனின் வாரிசுகள் அனைவருக்கும் பாகம் உள்ளது என்றால் - சரியல்ல. வழக்கு சொத்தில் வாதிக்கும் பாகம்உள்ளது என்றால் - சரியல்ல. அதனால் தான்வாதி என் மனைவிக்கு எழுதி வைத்துள்ள செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் - சரியல்ல. 09.04.2019 ம் தேதியன்று எனது சகோதரர் அண்ணாதுரைக்கு 283 ஏ/5 பி3 ல் 2 ஏர்ஸ் நிலத்தையும் 283 ஏ 6 பில் உள்ள 2 ஏர்ஸ் நிலத்தையும் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளேன் என்றால் - சரிதான். அந்த சொத்திலும் வாதிக்கு 1/5 பாகம் உள்ளது என்றால் - சரியல்ல.

அண்ணாதுரை பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று வாதி பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் - சரியல்ல. வாதியை ஏமாற்ற வேண்டும் என்ன எண்ணத்தோடு எனது செல்வாக்கை பயன்படுத்தி மோசடியாக ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் - சரியல்ல. 02.03.2007 ல் ரவீந்திரனால் வாங்கப்பட்ட சொத்தானது தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பணியாற்றிய சம்பள தொகையிலிருந்தும் வங்கியிலிருந்து கடன் பெற்றும் வீடு கட்டியுள்ளார் என்றாலும் அது அவருக்கு தனிப்பட்ட சொத்து என்றாலும் - சரியல்ல. அதிலும் எங்களுக்கு பங்கு உள்ளது. நான் சொல்வதுபோல மேற்படி சொத்தில் எனக்கோ எனது மற்ற சகோதர சகோதரிக்கோ எந்த பாகமும் கிடையாது என்றால் - சரியல்ல. வாதி அவரது சுய சம்பாத்தியத்தை கொண்டு அந்த சொத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றாலும் - சரியல்ல. **(வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).**

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

MUTHURAMAN

Digitally signed by MUTHURAMAN
DN: cn=MUTHURAMAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.02 17:43:58 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.